**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 130 of 2024

DATE : 20.05.2025

Depositions of witness for Prosecution

PW : 1

| | | | |
|---|---|---|---|
| Name | லங்கேஸ்வரன் | Caste | |
| Father/Husband's Name | சின்ன வைரமுத்து | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the $20^{th}$ day of May 2025

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை : –**

1) நான் துலுக்கப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரிக்கும் ஈஸ்வரன் என்பவருக்கும் பொதுப்பாதை சம்மந்தமாக பிரச்சினை இருந்து வந்தது. கடந்த 19.09.2021ம் தேதி மாலை 5.30 மணிக்கு நான் எனது மாமா காட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது ஈஸ்வரனுக்கும் எதிரிக்கும் பாதை சம்மந்தமாக வாய்தகராறு ஏற்பட்டது. சண்டை பெரிதாகிவிடுமோ என்று நான் விலக்கிவிட சென்றேன். அப்போது எதிரி கையில் வைத்திருந்த மண்வெட்டியால் என்னை இடது முழங்கையில் வெட்டிக்காயப்படுத்தினார். சண்டையை சக்திவேல், தங்கராஜ் ஆகியோர்கள் விலக்கிவிட்டார்கள். ஈஸ்வரன் மனைவி முத்துமாரி என்பவரும் எதிரியை சத்தம்போட்டு அனுப்பி வைத்தார்கள். அவரையும் தகாத வார்த்தையால் ஆஜர் எதிரி பேசினார். எதிரி போகும்போது என்னை பார்த்து என்னைக்கினாலும் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். காயம்பட்ட நான் எனது மாமாவுடன் ஆட்டோவில் நத்தம்பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு